# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

### 1. அமெரிக்காவில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் குடியுரிமை பெற தகுதியுள்ளது என அந்த நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

I. முன்னதாக, அமெரிக்காவில் சட்டவிரோதமாக அல்லது தற்காலிகமாக குடியேறியவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்க முடியாது என அதிபர் டொனால்ட் டிரம்ப் பிறப்பித்த ஆணையை ரத்து செய்து உச்சநீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியது.

II. அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பதவியேற்றவுடன், பிற நாட்டில் இருந்து குடியேறியவர்களுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்குவதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கும் ஆணையில் டிரம்ப் கையொப்பமிட்டார்.

III. இது அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் 14-ஆவது திருத்தத்தின்கீழ் வெளிநாட்டு தூதர்கள் மற்றும் அமெரிக்காவை ஆக்கிரமிக்கும் பிற நாட்டு ராணுவப் படைகளின் குழந்தைகள் தவிர நாட்டில் பிறக்கும் அனைவருக்கும் குடியுரிமை வழங்கும் அம்சத்துக்கு எதிரான உத்தரவாக கருதப்பட்டது.

IV. இதற்கு எதிராக நாடு முழுவதும் கண்டனங்கள் எழுந்ததையடுத்து, இந்த உத்தரவை நியூ ஹாம்ப்ஷைர் நீதிமன்றம் ரத்து செய்தது.

V. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அமெரிக்க அரசு மேல்முறையீடு செய்தது. இந்நிலையில், நியூ ஹாம்ப்ஷைர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்து, அமெரிக்காவில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் குடியுரிமை பெற தகுதி உள்ளது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

VI. 6:3 என்ற எண்ணிக்கையில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான அமர்வில் பெரும்பான்மையான டிரம்ப் நீதிபதிகள் அரசின் குடியுரிமை ஆணைக்கு எதிராக 91 பக்கத் தீர்ப்பை வழங்கினர்.

VII. அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது:

- வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: நமது அரசியல் சமூகத்தில் சுதந்திரமாகப் பங்கேற்கும் உரிமைகளை பல ஆண்டுகளாக குடியுரிமை வழங்கி வருகிறது. இதை உறுதிப்படுத்தவே 14-ஆவது திருத்தத்தின் மூலம் நாட்டில் பிறக்கும் அனைத்து நபர்களுக்கும் குடியுரிமை வழங்கும் வகையில் நமது அரசமைப்புச் சட்ட முன்னோர்கள் விரிவாக்கம் செய்தனர். இந்த உத்தரவாதத்தை நாம் தொடர வேண்டும். எனவே,

குடியுரிமைக்கு கட்டுப்பாடு விதிக்கும் அதிபரின் ஆணை அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது எனக் கருதி அதை நீதிமன்றம் ரத்து செய்கிறது எனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

VIII. இரண்டாவது முறையாக டிரம்ப் உத்தரவு ரத்து:

- முன்னதாக, இந்தியா உள்பட அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் பிற நாடுகள் மீது டிரம்ப் விதித்த கூடுதல் வரியை அமெரிக்க உச்சநீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் ரத்து செய்தது. இந்த உத்தரவுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததோடு தீர்ப்பளித்த நீதிபதிகளையும் டிரம்ப் விமர்சித்தார்.
- இதைத் தொடர்ந்து, இரண்டாவது முறையாக அவரது அரசின் குடியுரிமை ஆணைக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**2. நாடு முழுவதும் கிராமப்புற மக்களுக்கு ஆண்டுக்கு 125 நாள்கள் வேலை வழங்குவதற்கான விபி-ஜி ராம் ஜி எனும் புதிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் தமிழகத்தில் புதன்கிழமை (ஜூலை 1) முதல் அமல் படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை அரசிதழில் தமிழக அரசு வெளியிட்டது**.

I. மத்தியில் முந்தைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் எனும் 100 நாள்கள் வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு மாற்றாக 'வளர்ச்சியடைந்த பாரதம்- ஊரக வேலை மற்றும் வாழ்வாதார திட்டம்' (விபி -ஜி ராம் ஜி) எனும் புதிய திட்டத்தை மத்திய பாஜக அரசு கொண்டுவந்துள்ளது.

II. 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய பயணத்தில், கிராமப்புற மேம்பாட்டு கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விபி-ஜி ராம் ஜி சட்டம் ஜூலை 1-ஆம் தேதிமுதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வரும் என்றும் மத்திய அரசு அறிவித்தது.

III. இதன்மூலம் ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் ஒரு நிதி யாண்டில் வழங்கப்பட்டு வந்த 100 நாள்கள் வேலை இந்தப் புதிய சட்டத்தின் கீழ் தற்போது 125 நாள்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

IV. மத்திய அரசு இத்திட்டத்துக்காக 2026-27 நிதியாண்டில் ரூ.95,692.31 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலங்களின் பங்கையும் சேர்த்தால் மொத்தத் திட்ட மதிப்பு ரூ.1.51 லட்சம் கோடிக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

V. புதிய திட்டத்தின்படி, மத்திய மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் நிதிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதால் தமிழகத்துக்கு நிதிச் சுமை அதிகரிக்கும்

என்று முந்தைய திமுக தலைமையிலான அரசு எதிர்ப்பு தெரிவித்தது. மேலும், ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பழைய பெயரிலேயே, முந்தைய நிதி முறையே தொடர வேண்டும் என வலியுறுத்தியும் கடந்த ஜனவரியில் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

VI. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கும் நிலையில், விபி -ஜி ராம் ஜி திட்டத்தை தவெக தலைமையிலான அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி இந்தத் திட்டம் புதன்கிழமை முதல் அமலுக்கு வரும் என்று தமிழக அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளது.

VII. புதிய ஊரக வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ரிசர்வ் வங்கியில் புதிய கணக்கைத் தொடங்கி உள்ளது. இந்தத் திட்டத்துக்காக தமிழகத்துக்கு மத்திய அரசு ரூ.7,957.57 கோடி ஒதுக்கியுள்ள நிலையில், தமிழக அரசு அதன் பங்காக 40 சதவீத தொகை (ரூ.5305.04 கோடி) ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

VIII. கேரளம், ஆந்திரம், புதுச்சேரி உள்ளிட்ட தென் மாநிலங்களும் 125 நாள்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளன.

IX. காங்கிரஸ் ஆட்சியில் உள்ள தெலங்கானா, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் இந்தத் திட்டத்தை அப்படியே செயல்படுத்துவதா அல்லது சில குறிப்பிட்ட அம்சங்களை மட்டும் எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடுப்பதா என்ற ஆலோசனையில் உள்ளன. எனினும், நாடு முழுவதும் புதன்கிழமை முதல் சுமார் 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளில் இந்த புதிய திட்டம் அமலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**3. கோவை வானம்பாடி கவிதை இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவரும், இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவருமான கவிஞர் புவியரசு (94) உடல்நலக் குறைவால் கோவையில் காலமானார்.**

I. தொடக்கத்தில் ம.பொ.சி.யின் தமிழரசுக் கட்சியில் இருந்த இவர், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் ஆதரவாளராக இருந்தார். தமிழ்நாடு கலை, இலக்கியப் பெருமன்றத்தின் பல்வேறு பொறுப்புகளிலும் இருந்துள்ளார். கோவையில் வானம்பாடி கவிதை இயக்கத்தை தோற்றுவித்தவர்களில் முதன்மையானவரான கவிஞர் புவியரசு, 1970 முதல் 1977 வரை வானம்பாடி கவிமடலின் பொறுப்பாசிரியராக இருந்தார். 1970-களில் தமிழ் இலக்கியத்தில் சமூக மாற்றத்துக்கான புரட்சிகரமான, புதுக்கவிதைகளை மக்களிடம் கொண்டு சேர்த்த முக்கியமான இயக்கமாக வானம்பாடி இயக்கம் இருந்தது.

II. கவிஞர்கள் மு.மேத்தா, நா.காமராசன், சிற்பி பாலசுப்பிரமணியம், மீரா, அப்துல் ரகுமான், தமிழ்நாடன் உள்ளிட்ட பல்வேறு இலக்கிய ஆளுமைகள் இணைந்து பணியாற்றிய வானம்பாடி இதழ், கவிஞர் புவியரசின் வீட்டு முகவரியில் இருந்துதான் வெளியானது.

III. கவிதையில் தொடங்கிய புவியரசின் எழுத்துப் பயணம் மேடை நாடகம், நாவல், சிறு கதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, காட்சி ஊடகங்கள் என்று பரந்து விரிந்தது. 58 நேரடி படைப்புகளையும், மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம், பொது அறிவு என 70-க்கும் மேற்பட்ட நூல்களையும் தமிழுக்குப் பங்களித்துள்ளார்.

IV. ஷேக்ஸ்பியர், கலில் கிப்ரான், உமர் கய்யாம், ஓஷோ, தாகூர் போன்றவர்களின் படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். புவியரசின் கவிதைகள் மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சிங்களம், ரஷிய மொழி, ஹங்கேரி உள்ளிட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

V. வங்கக் கவிஞர் காஜி நஸ்ருல் இஸ்லாம் எழுதிய தி ரெவலூஷனரி என்ற கவிதை நூலை புரட்சிக்காரன் என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு கடந்த 2007-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. கடந்த 2009-இல் இவரது கவிதைத் தொகுப்பான ‘கையொப்பம்' நூல் தமிழ் மொழிக்கான பிரிவில் சாகித்திய அகாதெமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டது.

VI. இதுவரை சாகித்திய அகாதெமி விருதை தமிழ் இலக்கியப் பிரிவில் முதன்மை விருதாகவும், மொழி பெயர்ப்புக்காகவும் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, கவிஞர்கள் சிற்பி பாலசுப்பிரமணியம், புவியரசு ஆகியோர் இருமுறை பெற்றுள்ளனர். இவர்களில் கவிஞர்கள் புவியரசு, சிற்பி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கோவையை சேர்ந்தவர்கள்.மேலும், இந்த இருவரும் வானம்பாடி கவிதா மண்டலத்தின் கவிஞர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4. **இலங்கையில் 'டெங்கு' காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 54,000-ஐ கடந்துள்ளது; இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர். மருத்துவமனைகளில் நோயாளிகள் நிரம்பி வருவதால், தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த அரசு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.**

5. **விண்வெளிக்குச் சென்ற முதல் மற்றும் ஒரே ஆப்கானிஸ்தான் வீரரான அப்துல் அஹத் மொமண்ட் (67), ஜெர்மனியில் புற்றுநோயால் காலமானார். 1988-ஆம் ஆண்டு சோவியத் விண்வெளித் திட்டத்தின் கீழ் இவர் இந்த வரலாற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.**

6. **தென்னாப்பிரிக்காவில் சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அந்நாட்டில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. தென்னாப்பிரிக்காவில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டினர் அனைவரும் செவ்வாய்க்கிழமைக்குள் வெளியேற வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் கெடுவிதித்திருந்தன.**

I. சட்டவிரோத குடியேறிகளால் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் பறிபோவதாகவும், குற்றச்சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் புழக்கம் அதிகரிப்பதாகவும் போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மேலும், உள்ளூர் சில்லறை வர்த்தகக் கடைகளை வெளிநாட்டினரே ஆக்கிரமித்துள்ளதாகவும் அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

II. இருப்பினும், போராட்டக்காரர்களின் இந்த எச்சரிக்கையை தென்னாப்பிரிக்க அரசு திட்ட வட்டமாக நிராகரித்துள்ளது. அந்நாட்டு அதிபர் சிறில் ராமபோசா போராட்டக் குழுக்களின் தலைவர்களை நேரில் சந்தித்து, அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துமாறு அறிவுறுத்தினார்.

III. தாயகம் திரும்பும் மக்கள்:

- போராட்டங்களின் எதிரொலியாக, அண்டை நாடுகளான ஜிம்பாப்வே, மலாவி, நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் அச்சத்துடன் தங்களின் தாயகங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.
- குறிப்பாக, நைஜீரிய அரசு தங்களின் குடிமக்களைத் தற்காலிகமாக மீட்பு விமானங்கள் மூலம் தாயகத்துக்கு அழைத்துச் செல்லத் தொடங்கியுள்ளது. இதுவரையில் 600–க்கும் மேற்பட்ட நைஜீரியர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.
- போராட்டக்காரர்களால் தங்களின் வாழ்வாதாரக் கடைகள் சூறையாடப்பட்டதாகவும், தங்களுக்குப் பாதுகாப்பு இல்லாததால் உயிருக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறுவதாகவும் தாயகம் திரும்பிய நைஜீரிய மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

7. **காங்கோ குடியரசில் வேகமாகப் பரவி வரும் எபோலா தொற்றுப் பாதிப்பால், ஆப்பிரிக்க கண்டத்துக்கு சுமார் 360 கோடி டாலர் வரை பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன், லட்சக்க ணக்கானோர் வேலை வாய்ப்புகளை இழக்கும் அபாயம் உள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.**

I. இத்தொற்றைக் கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் விரைந்து போதிய நிதி மற்றும்

மருத்துவ ஆதாரங்களுடன் நடவடிக்கை எடுக்காவிட்டால், இச்சுகாதார அவசரநிலை ஒட்டுமொத்த ஆப்பிரிக்க பிராந்தியத்திலும் மிகக் கடுமையான மற்றும் நீண்ட கால வளர்ச்சி முடக்கத்தை ஏற்படுத்தும் என்று ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

II. காங்கோ குடியரசில் கடந்த மே 15 பரவத் தொடங்கிய 'புண்டிபுகியோ' எபோலா தொற்றால் இதுவரை 1,307 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் 377 பேர் உயிரிழந்துள்ளனர். இக்குறிப்பிட்ட எபோலா வகைக்கு இது வரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியோ அல்லது முறையான சிகிச்சையோ கண்டறியப்படாததால் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

III. தற்போது காங்கோவைத் தாண்டி அண்டை நாடான உகாண்டாவிலும் இத்தொற்று பரவியுள்ளதுடன், காங்கோவில் இருந்து திரும்பிய பிரான்ஸ் நாட்டு மருத்துவர் ஒருவருக்கும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தெற்கு சூடான், ருவாண்டா, அங்கோலா ஆகிய அண்டை நாடுகளுக்கும் இது பரவக்கூடும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

IV. இதனிடையே, இத்தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்காக தலைநகர் கின்ஷாசா உள்ளிட்ட எபோலா பாதிப்பு இன்னும் கண்டறியப்படாத பிற மாகாணங்களிலும் பொதுக் கூட்டங்கள் மற்றும் மக்கள் கூடுவதற்குக் காங்கோ உள்துறை அமைச்சகம் தடை விதித்துள்ளது.

V. ஆனால், அதிபர் பெலிக்ஸ் ஷிசேகெடி 3-ஆவது முறையாகப் போட்டியிடும் வகையில் கொண்டு வரப்படவுள்ள அரசமைப்புச் சட்டத் திருத்தத்துக்கு எதிராகத் திட்டமிடப்பட்டிருந்த மக்கள் போராட்டங்களை ஒடுக்கவே, எபோலா தொற்றைக் காரணம் காட்டி அரசு இத்தடையை விதித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

VI. இந்த அரசியல் விவாதங்களுக்கு மத்தியில் நாட்டு மக்களிடையே உரையாற்றிய அதிபர் ஷிசேகெடி, எபோலா தொற்றை எதிர்கொள்ள 31.9 கோடி டாலர் மதிப்பிலான அவசரகாலத் திட்டத்தை அறிவித்தார். 'எபோலா என்பது வெறும் வதந்தி அல்ல; அது ஒரு தீவிர சுகாதார நெருக்கடி' என்று குறிப்பிட்ட அவர், சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

**8. ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த உலகின் மிகப் பெரிய கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாட நிறுவனமான எம்எஸ்சி, கேரளத்தில் உள்ள அதானி குழுமத்தின் விழிஞ்ஞம் துறைமுகத்தில் 49 சதவீத பங்குகளை சுமார் 140 கோடி டாலருக்கு வாங்குகிறது.**

I. கடந்த 2024, டிசம்பரில் தொடங்கப்பட்ட விழிஞ்ஞம் துறை முகம், இந்தியாவின் முதல் ஆழ்கடல் சரக்கு மாற்று துறைமுகமாகும். ஐரோப்பா, பாரசீக வளைகுடா மற்றும்

தொலைதூர கிழக்கு நாடுகளை இணைக்கும் சர்வதேச கடல் வணிகப் பாதையிலிருந்து வெறும் 10 கடல் மைல் தொலைவில் இது அமைந்துள்ளது.

II. தற்போது ஆண்டுக்கு 16 லட்சம் கன்டெய்னர் சரக்குகளைக் கையாளும் திறன் கொண்ட இத்துறைமுகம், வரும் 2029-க்குள் தனது திறனை 3.5 மடங்கு அதிகரிக்கும் வகையில் அதிநவீன உள்கட்டமைப்புடன் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

III. இந்நிலையில், இந்திய துறைமுகத் துறையில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய அந்நிய தனியார் முதலீடாகக் கருதப்படும் இப்புதிய ஒத்துழைப்பின் மூலம், விழிஞ்ஞம் துறைமுகத்துக்கு வரும் சர்வதேச சரக்குகளின் அளவு கணிசமாக அதிகரிக்கும். குறிப்பாக, தென்கிழக்கு ஆசிய துறைமுகங்களைச் சார்ந்திருக்கும் வங்கதேசத்தின் சரக்குகள் இனி இந்தியா வழியே மாற்றப்படும் என்று அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

**9. நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான எச்டிஎஃப்சி வங்கியின் புதிய பகுதி நேர தலைவராக முன்னாள் நிதிச் செயலரும், முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையருமான ராஜீவ் குமார் - நியமிக்கப்பட்டுள்ளார்.**

I. வங்கிச் செயல்பாடுகள் தனது தனிப்பட்ட நெறிமுறைகளுக்கு முரணாக இருப்பதாகக் கூறி, கடந்த மார்ச்சில் தனது பதவியை ராஜிநாமா செய்த அதானு சக்ரவர்த்திக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

II. அடுத்த 4 ஆண்டுகளுக்கு வங்கியின் சுயாதீன இயக்குநராக ராஜீவ் குமார் செயல்பட வங்கியின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவரை 3 ஆண்டுகளுக்கு பகுதிநேர தலைவராக நியமிக்க ரிசர்வ் வங்கியின் இறுதி ஒப்புதலுக்காகவும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

III. இந்தியாவின் 25-ஆவது தலைமைத் தேர்தல் ஆணையரான ராஜீவ் குமார், உலகிலேயே மிக அதிகமான வாக்காளர்கள் பங்கேற்ற 2024 மக்களவைத் தேர்தலைத் தொய்வின்றி வெற்றிகரமாக நடத்திக் காட்டிய பெருமைக் குரியவர் ஆவார்.

**10. தனது பிராந்தியங்களான கிரீன்லாந்து மற்றும் ஃபாரோ தீவுகள் ஆகியவற்றை தனித் தனி அணிகளாக ஒலிம்பிக் போட்டிகளில் அங்கீகரிக்க வேண்டும் என, சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலிடம் டென்மார்க் கோரியுள்ளது.**

**11. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2026, மார்ச் இறுதியில் ரூ.72.08 லட்சம் கோடியாக (762.8 பில்லியன் டாலர்) உயர்ந்துள்ளதாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக அதில் மேலும் கூறப்பட் டிருப்பதாவது:**

I. அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்ததன் காரணமாக இந்திய ரூபாய் மற்றும் பிற நாடுகளின் ரூபாய் மதிப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2026, மார்ச் இறுதியில் ரூ.72.08 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 2025, மார்ச் இறுதியில் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.69.58 லட்சம் கோடியாக (736.3 பில்லியன் டாலர்) இருந்தது.
II. இந்நிலையில், அமெரிக்க டாலர் மதிப்பீட்டு மாற்றத்தை தவிர்த்துவிட்டால் 2025, மார்ச் நிலவரத்துடன் ஒப்பிடுகையில் 2026, மார்ச்சில் வெளிநாட்டுக் கடன் ரூ.24.85 லட்சம் கோடிக்கு (26.3 பில்லியன் டாலர்) பதிலாக ரூ.48.1 லட்சம் கோடியாக (51 பில்லியன் டாலர்) உயர்ந்திருக்கும்.
III. 2025, மார்ச் காலகட்டத்தில் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) வெளிநாட்டுக் கடன் விகிதம் 19.8 சதவீதமாக இருந்த நிலையில், 2026, மார்ச்சில் 20.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2026, மார்ச்சில் நாட்டின் நீண்டகால கடன் (ஓராண்டுக்கு மேல்) ரூ.58 லட்சம் கோடியாக (613.5 பில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது.
IV. அமெரிக்க டாலரில் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனின் பங்கு 55.5 சதவீதமாகவும், இந்திய ரூபாயின் பங்கு 29.4 சதவீதமாகவும், ஜப்பான் யென்னின் பங்கு 6.4 சதவீதமாகவும் உள்ளன.
V. ஒட்டுமொத்த இந்திய கடனில் அரசின் கடன் குறைந்துவிட்டது. அதேவேளையில் அரசு சாராக் கடன் அதிகரித்துவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

### 12. இந்தியாவின் எண்ம (டிஜிட்டல்) பணப் பரிமாற்ற சேவையான யுபிஐ, ஐரோப்பிய நாடான கிரீஸில் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

I. இது, இந்தியாவின் எண்ம பணப் பரிவர்த்தனை முறையை உலக அளவில் விரிவுபடுத்தும் முயற்சியில் மேலும் ஒரு முக்கிய மைல்கல் என்று மத்தியவர்த்தகம், தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
II. சில வாரங்களுக்கு முன்பு, பிரான்ஸின் நைஸ் நகரில் உள்ள புகழ்பெற்ற கேலரீஸ் லஃபாயெட் விற்பனையகத்தில் யுபிஐ சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு, 2024-ஆம் ஆண்டு பாரீஸில் யுபிஐ தொடங்கப்பட்டது. இதன்மூலம் இந்தியாவின் யுபிஐ சேவையை ஏற்றுக் கொண்ட 10-ஆவது நாடாக கிரீஸ் இடம் பிடித்துள்ளது.
III. கிரீஸ் தவிர சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், மோரீஷஸ், நேபாளம், பூடான், கத்தார், இலங்கை, கம்போடியா ஆகிய நாடுகளிலும் யுபிஐ சேவை கிடைக்கிறது.
IV. இந்த நாடுகளில் இந்தியப் பயணிகள், தாங்கள் இந்தியாவில் பயன்படுத்தும் அதே

யுபிஐ செயலிகள் மூலம் பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**13. ராணுவத்தின் 31- ஆவது தலைமைத் தளபதியாக தீரஜ் சேத் பதவியேற்றார்.**

I. சுமார் 13 லட்சம் வீரர்களுடன் உலகின் மாபெரும் ராணுவங்களில் ஒன்றாக விளங்கும் இந்திய ராணுவம், எல்லையில் சவால்களை எதிர்கொள்வதுடன், தற்சார்பு மற்றும் எதிர்காலத்துக்குத் தயாரான படையாக உருவெடுக்கும் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தருணத்தில், அதன் தலைமைப் பொறுப்பை தீரஜ் சேத் ஏற்றுள்ளார்.

II. ராணுவத்தின் 30-ஆவது தலைமை தளபதியாக இருந்த உபேந்திர துவிவேதியின் பதவிக் காலம் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, புது தில்லி சௌத் பிளாக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய ராணுவ தலைமைத் தளபதியாக தீரஜ் சேத் பதவியேற்றார். இந்தப் பதவியை ஏற்கும் முன் ராணுவ துணை தலைமைத் தளபதியாக இருந்த தீரஜ், ஆயுதப் படை பொறுப் புகளில் 40 ஆண்டுகளுக்கும் மேல் பணி அனுபவம் கொண்டவர்.